**சென்னை மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழுக் கூட்டம் உணவுபொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் ஆணையாளர் தலைமையில் 17/10/2008 அன்று முற்பகல் 10.30 மணியளவில் நடத்தப்பட்டது. கூட்டத்தின் நடவடிக்கை குறிப்புகள்**

1. **அரசுத் துறை / நிறுவனங்களில் ஒரு குறிப்பிட்ட அலுவலரை நுகர்வோர் உரிமை மற்றும் தகவல் அலுவலராக நியமித்தல்**

- மருந்து கட்டுப்பாட்டுத்துறை, சென்னை மாநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம், பேரூராட்சி நிர்வாகம், போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்புத் துறை, தொழிலாளர் துறை, மாநகர போக்குவரத்து கழகம், BIS, BSNL ஆகிய துறைகள் / நிறுவனங்கள் நுகர்வோர் உரிமை மற்றும் தகவல் அலுவலரை நியமனம் செய்து நியமன ஆணை அனுப்பி வைத்துள்ளனர்.
- பிற துறைகளான சென்னை மாநகராட்சி, மின்சார வாரியம், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத் துறை, மருத்துவம் மற்றும் ஊரக நலத்துறை, நகராட்சி நிர்வாகம் , சட்டமுறை எடையாளவு கட்டுப்பாட்டுத் துறை, தொழில் மற்றும் வணிகத் துறை, தென்னக ரயில்வே, எண்ணெய் நிறுவனங்கள் ஆகிய துறைகள் உடனடியாக நுகர்வோர் உரிமை மற்றும் தகவல் அலுவலரின் நியமன விவரங்களை அனுப்பி வைக்க ஆணையர் கேட்டுக் கொண்டார். மேலும் இதற்கென இரண்டாம் நிலை அலுவலரை நியமனம் செய்தால் குறைதீர் நடைமுறை சிறப்பாக அமையும் என்பதுடன் பொதுமக்களுக்கு பயனுள்ளதாக அமையும் என ஆணையர் கருத்து தெரிவித்தார். அரசு துறைகள் தங்களின் இணையதளத்தில் நுகர்வோர் குறைதீர் அலுவலர்கள் பெயர் / தொலைபேசி / மின் அஞ்சல் விவரங்களை சேர்த்திடவும் அதனை உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் இணையதளத்தில் சேர்ப்பதற்கான விவரங்களை அளிக்கவும் கேட்டுக் கொண்டார். இவ்வாறு செய்வதால் பொதுமக்கள் தங்களது குறை / கோரிக்கை தொடர்பாக உரிய அலுவலரை எளிதில் அணுகுவதற்கு சுலபமாக இருக்கும் எனவும் கருத்து தெரிவித்தார்.

2. **உணவு பாதுகாப்பு மற்றும் இறக்குமதி செய்யும் உணவு பண்டங்கள் மீது கட்டுப்பாடுகள் விதித்தல்**

சென்னை மற்றும் அதன் சுற்று பகுதிகளிலும் மாவட்டங்களிலும் இனிப்பு மிட்டாய்கள், ஐஸ் கீரீம் முதலியவை விற்பனை செய்யப்படுகின்றன. இது குறித்த விவரங்கள் சேகரித்து பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்புத் துறையின் இணை இயக்குநர் மற்றும் தொழிலாளர் துறை எடை அளவு கட்டுப்பாட்டு அலுவலர் ஆகியோர்களிடம் 24/06/2008 நடைபெற்ற கூட்டத்தின்போது ஒப்படைக்கப்பட்டது. ஒப்படைக்கப்பட்ட உணவு பண்டம் மற்றும் சந்தையில் விற்பனைக்கென பொட்டலமிடப்பட்டு வழங்கப்படும் உணவு பண்டங்கள் குறிப்பாக வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உணவு பொருட்களின் தரம் பரிசோதனை செய்யப்பட்டு அவை மனித நுகர்வுக்கு உகந்ததா என்ற விவரமும் அப்பொருள்கள் பொட்டலமிடப்பட்டு வழங்குவதில், பொட்டல பொருட்கள் கட்டுப்பாட்டு ஆணையின் விதிமுறைகள் கடைபிடிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்த

விவரத்தினை கூட்டத்தில் தெரிவிக்க கோரப்பட்டது.

- இத்துறை மாதம் ஒன்றிற்கு 300 மாதிரிகளை ஆய்வு செய்கிறது. வெளிநாட்டு உணவுப் பொருட்களை பொறுத்த மட்டில் மாதிரிகள் மற்றும் சென்னையிலிருந்து பெறப்படுகின்றன. இவ்வகையில் 5,441 மாதிரிகள் பெறப்பட்டு 50 முதல் 60 மாதிரிகள் கலப்படம் உள்ளதெனவும் 162 மாதிரிகள் மிஸ் பிராண்டட் எனவும் கண்டறியப்பட்டு ரத்து செய்யப்பட்டது. இறக்குமதி செய்யப்படும் உணவு பொருட்கள் 60% self life இருக்க வேண்டும். இத்துறை தற்போது ஐஸ்கிரீம் மற்றும் மிட்டாய்கள் பரிசோதனை செய்யும் பணிகளில் ஈடுபட்டுள்ளது. கடந்த கூட்டத்தில் தரப்பட்ட அமுதம் பழரசம் பரிசோதனை செய்வதற்கு போதுமான அளவு இல்லை. இருப்பினும் பொட்டலத்தில் கூறிய தகவல்கள் உண்மை நிலை ஆராய்ந்ததில் பழத்திற்கு உள்ள குணங்கள் இல்லாமல் இராசாயன பொருட்கள் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது என அறிய முடிந்தது. என்னென்ன பொருட்கள் கொண்டு தயாரிக்கப்பட்டது என்கிற விவரம் குறிப்பிடப்படவில்லை. மேலும் சில இனங்களில் பாக்கெட்டில் உள்ள புகைப்படத்திற்கும் உணவு பொருளுக்கும் சம்மந்தம் இல்லாமல் இருக்கிறது. இந்த விவரம் சிறிய எழுத்துகளில் குறிப்பிடப்படுகிறது.

- உணவு பொருட்கள் குறிப்பாக தரமற்ற சாக்லேட்டுகள் விற்பனை செய்ததற்காக வணிகர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தயாரிப்பாளர் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை எனவும் ஒரு பத்திரிக்கையினை மேற்கோள் காட்டி தன்னார்வ ஆர்வலர் விவாதம் எழுப்பினார். தயாரிப்பாளர் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என துறை அலுவலர் தெரிவித்தார். தரமான பொருட்களை விற்பனை செய்கின்றோமா என்பதனை உறுதிபடுத்திக் கொள்ள வேண்டிய பொறுப்பு வணிகருக்கும் உண்டு என்பதால் அவர்மீதும் நடவடிக்கை எடுப்பதாக அலுவலர் தெரிவித்தார். இது சம்மந்தமாக துறை எடுத்த நடவடிக்கை எடுத்த விவரம் மற்றும் பொதுமக்களுக்கான தற்காப்பு விவரம் அதாவது பொருட்கள் வாங்கும் போது அவர்கள் கவனிக்க வேண்டிய அம்சங்கள் என்னென்ன என்பது குறித்து பத்திரிக்கை செய்தியாக வெளியிட பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத் துறை மற்றும் சட்டமுறை எடையளவு கட்டுப்பாட்டு துறைகளை ஆணையர் கேட்டுக் கொண்டார். மேலும் வணிக சங்கங்களின் உறுப்பினர்களை அழைத்து கூட்டம் ஒன்றை நடத்தி அதில் விற்பனைக்கு பொருட்கள் வாங்கும் போது அவர்கள் உறுதிபடுத்தி கொள்ள வேண்டிய அம்சங்கள் குறித்து தெரிந்து கொள்ளும் வகையில் விழிப்புணர்வு பயிற்சி தரலாம் என ஆணையர் கருத்து தெரிவித்தார். பாதுகாப்பான உணவு என்பதற்கு அதிக முக்கியத்துவம் தரவேண்டியது அவசியம் என்பதால் தன்னார்வ நுகர்வோர் அமைப்பினரும் மாதிரிகள் எடுத்து அதனை பரிசோதனைக்கு உட்படுத்தி நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்து நடவடிக்கை மேற்கொள்ளலாம் எனவும் ஆணையர் கருத்து தெரிவித்தார். மேலும் இது தொடர்பாக தன்னார்வ அமைப்பினர் சேகரிக்கும் விவரங்களை துறை அலுவலர்களுக்கு அளித்தால் தவறு செய்யும் வணிகர்கள் மீது நடவடிக்கை எடுக்க இயலும் என ஆணையர் கருத்து தெரிவித்தார்.

## 3. எரிவாயு இணைப்புகள் உபயோகம் மற்றும் விநியோகம்

எரிவாயு வழங்கல் குறித்து பொது மக்களிடமிருந்து பெறப்படும் புகார்கள் தீர்வு செய்திட எண்ணெய் நிறுவனங்கள் பின்பற்றும் நடைமுறைகள் பற்றியும் எரிவாயு இணைப்பு முகவர்கள் தாங்கள் தராசு எடுத்து செல்வதை உறுதி செய்ய எண்ணெய் நிறுவனம் மேற்கொண்ட நடவடிக்கை குறித்த விவரம் அளிக்க கோரப்பட்டது.

- எண்ணெய் நிறுவனங்கள் 2.10.08 முதல் பிரத்யேக குறைதீர் பிரிவு ஆரம்பித்து அதில் புகார் பதிவு செய்ய இலவச தொலைபேசி அழைப்பு வசதி செய்யப்பட்டுள்ளது என தெரிவித்து அதன் எண்கள் கீழ்க்கண்டவாறு தெரிவித்தனர்.
  IOC -- 1800 233555
  BPC -- 1800 222725
  HPC -- 1800 233777

- இந்தியன் ஆயில் கழகம் டெலிவரி செய்யும் பணியாளர்கள் எடுத்து செல்வதற்கென 1600 ஸ்பிரிங் பாலன்ஸ் வாங்கி தந்துள்ளதாகவும் அதே போல பாரத் எண்ணெய் நிறுவனம் Sorter Scale வழங்கியுள்ளதாக தெரிவித்தது. ஆனால் நடைமுறையில் அநேக டெலிவரி பணியாளர்கள் இதனை எடுத்து செல்வதில்லை என ஆணையாளர் கவலை தெரிவித்தார். அனைத்து டெலிவரி பணியாளர்களும் தராசுகளை தவறாது எடுத்து செல்ல தக்க அறிவுரைகள் எரிவாயு முகவர்களுக்கு வழங்க எண்ணெய் நிறுவனங்களை ஆணையர் கேட்டுக் கொண்டார்.

- சில எரிவாயு முகவர்கள் தங்களிடம் அடுப்பு வாங்க வேண்டும் என வற்புறுத்துவதாக புகார் பெறப்படுகிறது. இது சம்மந்தமாக திரு கே. சுப்புராஜ் என்பவர் அளித்த புகார் நடவடிக்கைக்காக இந்துஸ்தான் எண்ணெய் கழக அலுவலரிடம் நேரில் அளிக்கப்பட்டது. பட்டாபிராம் பகுதியில் உள்ள பாரத் எண்ணெய் நிறுவன முகவரும் தன்னிடமே அடுப்பு வாங்க வேண்டும் என வற்புறுத்துவதாக புகார் தெரிவிக்கப்பட்டது. இது போன்று முறைகேடான வணிக செயலில் ஈடுபடும் முகவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் புதிய இணைப்பு பெறுபவர் என்னென்ன பொருட்கள் முகவரிடம் வாங்கிட வேண்டும் என்றும் அதற்குரிய தொகை எவ்வளவு என்பதையும் குறிப்பிட்டு அறிவிப்பு பலகையில் காட்சிப்படுத்த எண்ணெய் நிறுவனங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆணையர் கேட்டுக் கொண்டார்.

- டெலிவரி பணியாளர்கள் மாற்று சிலிண்டர் கொடுக்கும் போது 5 முதல் 10 ரூபாய் வரை கூடுதலாக கேட்பதாக புகார் தெரிவிக்கப்பட்டது. இதனை நிவர்த்தி செய்வதற்கு டெலிவரி பணியாளர்களுக்கு ஊதிய நிர்ணயம் செய்வது மட்டுமே சிறந்த நடவடிக்கையாக அமையும் என நுகர்வோர் அமைப்புகளால் கருத்து தெரிவிக்கப்பட்டது. பொது மக்கள் நலனை மனதில் கொண்டு இது தொடர்பாக முகவர் சங்கங்களை அழைத்து பேசி டெலிவரி பணியாளர்களுக்கு சரியான ஊதிய நிர்ணயம் செய்திட நடவடிக்கை எடுக்க எண்ணெய் நிறுவனங்களை ஆணையர் கேட்டுக் கொண்டார்.

4. <u>சிறப்பு பொது விநியோக திட்ட பண்டங்களின் இருப்பு நிலை</u>

- நியாயவிலை அங்காடிகள் மூலம் சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் என்னென்ன பொருட்கள் வழங்கப்படுகின்றன என்பது குறித்து துணை ஆணையர் (நகரம்) வடக்கு விவரித்தார்.

- துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில், ஆட்டா, கோதுமை, மைதா, ரவை ஆகிய சிறப்பு அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்படுகின்றன. நியாயவிலை அங்காடிகளில் மேலே குறிப்பிடப்பட்ட பொருட்கள் இருப்பில்லாமல் இருந்தாலோ அல்லது கடைக்காரர் வழங்கிட மறுத்தாலோ புகார் பதிவு செய்ய கீழ்க்கண்ட தொலைபேசி எண்களில் அனுக கேட்டுக் கொண்டார்.

  துணை ஆணையர் (நகரம்) வடக்கு -- 285551028
  94450 00152
  துணை ஆணையர்(நகரம்) தெற்கு -- 28551026
  94450 00160

- மேலும் அனைத்து உதவி ஆணையாளர்கள் / மாவட்ட / வட்ட வழங்கல் அலுவலர்கள் ஆகியோரிகளின் கைபேசி / மின் அஞ்சல் பற்றி www.consumer.tn.gov.in ல் தெரிந்து கொள்ளலாம். உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் அனைத்து நடவடிக்கை விவரங்களும் இணையதளத்தில் (www.consumer.tn.gov.in) உள்ளன. இதனை பயன்படுத்தி கொள்ள அனைத்து ஆர்வலர்களையும் ஆணையர் கேட்டுக் கொண்டார்.

காரணீஸ்வரர் கூட்டுறவு பண்டக சாலை-2 (LG 008) என்கிற அங்காடி மோசனமான கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது என்றும் அதனை நல்ல கட்டிடத்திற்கு மாற்றம் செய்ய கோரிக்கை வைக்கப்பட்டது.

- சென்னை நகரில் இது போன்று 300 நியாயவிலை அங்காடிகள் அடையாளம் காணப்பட்டுள்ளது. இதற்கு இடமோ அல்லது கட்டிடமோ தர சென்னை மாநகராட்சி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. அரசுத் துறைகள் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள பயன்படுத்தாத கட்டிடம் ஏதும் இருந்தால் அதனை தந்து உதவலாம் என கூட்டத்திற்கு வந்திருந்த அலுவலர்களை ஆணையர் கேட்டுக் கொண்டார். இதற்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் அல்லது கூட்டுறவுத் துறை வாடகை தந்துவிடும் எனவும் தெரிவித்தார். விரைவில் இந்த 300 நியாவிலை கடைகள் நல்ல கட்டிடத்தில் செயல்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என ஆணையர் உறுதியளித்தார். சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தால் அனுமதி அளிக்கப்பட்ட குடியிருப்பு அங்கீகார இடங்களில் பொது மக்கள் நலனுக்காக ஒதுக்கப்படும் பொது பகுதியில் நியாயவிலை கடைகள் கட்டுவதற்கு தேவைப்படும் அளவுகளை குறிப்பிட்டு சம்மந்தப்பட்ட டெவலப்பர்களை ( Developers) அணுகி பெற்று கொள்ளலாம் என அத்துறையின் அலுவலர் தெரிவித்தார். இது சம்மந்தமான தொடர் நடவடிக்கை எடுக்கும்படி துணை ஆணையர் (நகரம்) வடக்கு மற்றும் தெற்கு அலுவலர்களை ஆணையர் கேட்டுக் கொண்டார்.

5. **<u>சென்னை நகரில் பொது மக்கள் அதிகம் பயன்படுத்தும் முக்கிய இடங்களில் நடைபாதையில் வாகனங்களை நிறுத்துதல்</u>**

சென்னை நகரில் பல பகுதிகளில் உள்ள நடைபாதையில் வாகனங்கள் நிறுத்தப்படுவதாலும் சிறு வணிக நிலையங்களாலும் பாதசாரிகளுக்கு பெருத்த சிரமம் ஏற்படுகிறது.

- சென்னை மாநகராட்சியை சேர்ந்த அலுவலர் எவரும் கூட்டத்தில் கலந்து கொள்ளாததால், இதனை விவாதம் செய்ய இயலவில்லை. நடைபாதைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்க கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. இந்த நடவடிக்கையை காவல் துறையின் ஒத்துழைப்போடு மாநகராட்சி மேற்கொள்ள வேண்டும் என்றும் அடுத்த கூட்டத்தில் இதன் மீதான விவாதத்திற்கு உரிய அலுவலர் பங்கேற்க ஆவன செய்ய வேண்டும் என சென்னை மாநகராட்சியை ஆணையர் கேட்டுக் கொண்டார்.
  (நடவடிக்கை : சென்னை மாநகராட்சி / காவல் துறை / நு.பா பிரிவு)

6. **<u>திரையரங்கநுளில் அதிக கட்டணம் வசூலிப்பது மற்றும் வணிக வரித்துறையின் முத்திரை அச்சடிக்கப்படாதது</u>**

திரையரங்கநுளில் அதிக கட்டணம் வசூலிப்பது மற்றும் நுழைவுச் சீட்டுகளில் வணிக வரித்துறை முத்திரை அச்சிடப்படாததற்கு என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது என்பது குறித்து வணிக வரித்துறை பதில் அளிக்க கேட்டுக் கொள்ளப்பட்டது.

- வணிக வரித்துறை அலுவலர் எவரும் கூட்டத்திற்கு வருகை தராததால் இப்பொருள் அடுத்த கூட்டத்தில் வைத்து விவாதிப்பது என தீர்மாணிக்கப்பட்டது. இந்த விவகாரத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதால் அடுத்த கூட்டத்தில் சென்னை மாவட்டத்தின் மாவட்ட வருவாய் அலுவலருக்கும் அழைப்பு அனுப்ப ஆணையர் கேட்டுக் கொண்டார்.
  (நடவடிக்கை: வணிகவரித் துறை / நு,.பா பிரிவு)

7. **<u>சென்னையில் திருமண மண்டபங்களில் பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்துவதை தடை செய்தல் சென்னையில் உள்ள சிறிய உணவகங்களில் மற்றும் தேநீர் கடைகளில் உணவு பரிமாற தரமற்ற பிளாஸ்டிக் கோப்பைகள் பயன்படுத்தப்படுகின்றன.</u>**

சென்னையில் பல திருமண மண்டபங்களில் பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்துவது இன்னமும் தடை செய்யப்படவில்லை. மேலும் இதர சிறிய உணவகங்களில் தேநீர் மற்றும் சாப்பிடும் உணவு பொருட்கள் தரமற்ற பிளாஸ்டிக்கில் விநியோகிக்கப்படுவது தடை செய்யப்பட வேண்டும். திருமண மண்டபங்களை பொறுத்தமட்டில் சென்னை மாநகராட்சி உரிமம் வழங்குவதனால் அதனை உரிம விதியாக நிர்ணயிக்கலாம் என கருத்து தெரிவிக்கப்பட்டது. தெருவோர கடைகள் பெருகி விட்ட நிலையில் சுகாதாரம் மற்றும் உணவு தயாரிப்பு, பாதுகாப்பு, விநியோகம் குறித்த

விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக கருத்துப்பட்டறை ஒன்றினை நடத்திட சென்னை மாநகராட்சி சுகாதார அலுவலரை 24/06/2008 தேதிய கூட்டத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டது.

- சென்னை மாநகராட்சி அலுவலர் எவரும் கூட்டத்திற்கு வருகை தராததால் இப்பொருள் அடுத்த கூட்டத்தில் வைத்து விவாதிப்பதாக தீர்மானிக்கப்பட்டது. நிலைமையை சீர் செய்திட சென்னை மாநகராட்சி என்ன நடவடிக்கை மேற்கொண்டது என்பது குறித்து அறிக்கை அனுப்ப ஆணையர் கேட்டுக் கொண்டார்.

## 8. <u>குழந்தைகள் பயன்படுததும் விளையாட்டுப் பொருட்களில் உள்ள ஆபத்து</u>

தற்போது சந்தைகளில் குழந்தைகளுக்கென விற்கப்படும் விளையாட்டுப் பொருட்களில் குழந்தைகளுக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடிய நச்சுப் பொருட்கள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இத்தகைய பொருட்களை மாதிரி எடுத்து ஆய்விற்கு அனுப்பிட உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் துணை ஆணையாளர் (நகரம்) வடக்கு / தெற்கு கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

- தன்னார்வ அமைப்புகள் கூறியதற்கேற்ப ஆய்வு செய்தபோது சென்ட்ரல் மற்றும் பாரிமுனை பகுதிகளில் "கத்தும் குருவி" பொம்மைகள் விற்பனை செய்யப்படவில்லை என்பதால் சம்பந்தப்பட்ட தன்னார்வ நுகர்வோர் அமைப்பினரை பொம்மை வாங்கி வர துணை ஆணையர் (நகரம்) கேட்டுக் கொண்டார். பரிசோதனைக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியினை கொண்டு மேற்படி பொம்மையினை வாங்கி பரிசோதனைக்கு உட்படுத்தி அவைகளில் என்னென்ன, உடல் நலத்திற்கு ஊறுவிளைவிக்கும், நச்சு பொருட்கள் உள்ளன என்பதை கண்டறிந்து நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் உரிய நடவடிக்கை எடுக்க துணை ஆணையர் (நகரம்) வடக்கினை ஆணையர் கேட்டுக் கொண்டார்.

வெளிநாட்டு பொம்மைகள் பிளாஸ்டிக் மற்றும் அட்டை பெட்டிகளில் அடைத்து விற்பனை செய்யப்படுகின்றன. அதில் இறக்குமதியாளர் பெயர் மட்டும் ஸ்டிக்கர் காகிதத்தில் அச்சடித்து ஒட்டப்பட்டுள்ளது. முகவரி மற்றும் பிற விவரங்கள் ஏதும் குறிப்பிடுவதில்லை. இது குறித்து நடவடிக்கை எடுத்திட தன்னார்வ நுகர்வோர் அமைப்பின் ஆர்வலர் கேட்டுக் கொண்டார்.

- இது பொட்டலமிடுதல் கட்டுப்பாட்டு ஆணையின் விதிகளுக்கு முரணானது என குறிப்பிட்ட ஆணையர், இது போன்ற பொருட்கள் எங்கு விற்பனை செய்யப்படுகின்றது என்ற தகவலை எடையாளவு கட்டுப்பாட்டு துறைக்கு தர தன்னார்வ நுகர்வோர் அமைப்பு ஆர்வலரை கேட்டுக் கொண்டார். இவ்வகை விற்பனை பொருட்களை பறிமுதல் செய்வதுடன் சம்மந்தப்பட்ட நிறுவமன் / வணிகர் மீது உரிய விதிகளின் கீழ் சட்டப்படி நடவடிக்கை எடுக்க எடையாளவு துறையினரை ஆணையாளர் கேட்டுக் கொண்டார்.

## 9. <u>சென்னை மாநகர போக்குவரத்து பேருந்து வசதிகள் குறித்து தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள்</u>

சென்னை மாநகர போக்குவரத்து கழகத்தின் சேவைகளில் காணப்படும் குறைபாடுகள் குறித்து பொது மக்களிடமிருந்து புகார்கள் மீது தீர்வு காண்பதற்கு பின்பற்றப்படும் நடைமுறைகள் குறித்து

விரிவான விளக்கம் தர கோரப்பட்டது.

இது குறித்து மாநகர போக்குவரத்து கழகத்தின் இணை மேலாண்மை இயக்குநர் தெரிவித்ததாவது:

- அனைத்து பேருந்துகளிலும் பொதுமக்களுக்கு ஏற்படும் குறைகளை களைய குறைதீர் பிரிவின் செல்பேசி எண்ணை ( 93833 37639 ) தெரிவிக்கும் போஸ்டர் ஒட்டப்பட்டிருப்பதாகவும் அந்த எண்ணிற்கு புகார் செய்தால் குறை நிவர்த்தி செய்யப்படும் எனவும் தெரிவித்தார். இதை தவிர 23455859, 23455832 ஆகிய எண்களிலும் புகார் தெரிவிக்கலாம். கடிதத்தின் மூலமும் புகார் தெரிவிக்கலாம். எவ்வகை புகார்களும் உடனுக்குடன் தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றும் தெரிவித்தார். மேலும் 01/04/2008 முதல் மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சரின் ஆணைகளின் பேரில் பிரத்யேக குறைதீர் பிரிவு தொடங்கப்பட்டுள்ளது. ஏப்ரல் 2008 மாதத்தில் 316 புகார்களும் மே 2008ல் 121ம் ஜீன் 2008ல் 107ம் ஜீலை 2008ல் 81ம் ஆகஸ்ட் 2008ல் 48 புகார் மனுக்களும் பெறப்பட்டுள்ளது. புகார் மனுக்கள் குறைந்து கொண்டிருக்கும் நிலையில் மாநகர போக்குவரத்து கழகம் சிறப்பான சேவை புரிந்து வருகின்றது என்பதை எடுத்து காட்டுகிறது என தெரிவித்தார்.

- மேலும் மாநகர போக்குவரத்து கழகம் காலாண்டு கூட்டம் முறையாக நடத்தி வருகின்றது எனவும் தெரிவித்தார். மாநகர போக்குவரத்து கழகம் முறையாக காலாண்டுக் கூட்டம் நடத்தி வருவதை ஆணையர் பாராட்டினார்.
- கூட்டத்தில் மாநகர போக்குவரத்தின் கவனத்திற்கு கீழ்க்கண்டவற்றை தன்னார்வ நுகர்வோர் அமைப்பினர் கொண்டு வந்தனர்.
  1. நெரிசல் நேரங்களில் டீசல் நிரப்புவதை தவிர்த்து இரவு நேரங்களில் டீசல் நிரப்பி பொது மக்களுக்கு ஏற்படும் இடையூறினை தவிர்த்தல்
  2. ஐயப்பன்தாங்கல் / கண்ணதாசன் நகர் / வியாசர்பாடி பணிமனை முறையாக பராமரிக்கப்பட கேட்டுக் கொண்டனர்
  3. ஒருவழிப்பாதையாக மாற்றப்பட்டுள்ள சாலைகளில் பழைய வழித்தடத்தினை கவனத்தில் கொண்டு பயணிகளுக்கு அதிக சிரமம் ஏற்படா வண்ணம் வழி தடம் அமைக்க வேண்டும்.
  4. காலாண்டு கூட்டத்திற்கான அழைப்பு முன்னதாக அனுப்புவதற்கும் அனைத்து தரப்பினருக்கும் பிரதிநிதித்துவம் வழங்கிடும் நோக்கில் அப்பகுதியின் அனைத்து பயணிகள் நல சங்கம் / குடியிருப்போர் நல சங்கம் / தன்னார்வ நுகர்வோர் அமைப்பினருக்க அழைப்பு அனுப்புதல் வேண்டும்.
  5. புறநகர் பேருந்து நிலையங்களில் உணவு பொருட்கள் அதிக விலைக்கு விற்கப்படுகின்றன. அதனை தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
  6. NH 205 சென்னை – திருப்பதி நெடுஞ்சாலையில் திருப்பதி பேருந்துகள் ஏதும் செல்வதில்லை. இச்சாலை வழியே திருப்பதிக்கு பேருந்து விட கோரிக்கை விடுக்கப்பட்டது.
  7. பெங்களூருவில் உள்ளது போன்று காலை நேரங்களில் நோயாளிக்களின் வசதிக்காக சிறப்பு பேருந்துகள் மருத்துவமனை வழியாக இயக்க கோரிக்கை விடுக்கப்பட்டது.
- மேற்கண்ட குறைபாடுகளை களைய தக்க நடவடிக்கை மேற்கொள்ள மாநகர போக்குவரத்து கழகத்தின் அலுவலரை ஆணையர் கேட்டுக் கொண்டார்.

## 11. சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம்

சென்னை மயிலாப்பூர் செங்குந்தபுரம் பகுதியில் குடிநீருடன் கழிவு நீர் கலப்பது நீண்ட நெடுங்காலமாக தீர்க்கப்படாத பிரச்சினையாக உள்ளது என தெரிவிக்கப்பட்டது.

- செங்குந்தபுரம் அல்லது சுப்ரமணியபுரம் எனும் பகுதிகள் மயிலாப்பூரில் இருப்பதாக தெரியவில்லை என்றும் சரியான முகவரி அளிக்கவும் சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் கேட்டுக்கொண்டுள்ளது. குறிப்பான புகார்களை பொறுத்தமட்டில், இம்மன்றத்தின் முன் விவாதத்திற்கு வைக்காமல் சம்மந்தப்பட்ட துறையிடம் முறையீடு செய்து குறைநிவர்த்தி செய்து கொள்ள ஆணையர் கேட்டுக் கொண்டார்.

தண்ணீர் இணைப்பு ஏதும் கோராத ஒரு நபருக்கு உரிமம் பெற்ற பிளம்பர் மூலம் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் அதே சமயத்தில் 2005ல் இணைப்பு கோரிய வேறு ஒரு நபருக்கு இன்னும் இணைப்பு வழங்கப்படாமல் உள்ளதை சுட்டிகாட்டி தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் தகவல் கேட்டதற்கு சரியான விளக்கம் தரவில்லை என தன்னார்வ நுகர்வோர் அமைப்பின் ஆர்வலர் கூறினார்.

இது குறித்து சம்மந்தப்பட்ட துறை அலுவலர் அளித்த பதில் விவரம்:

- தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் அலுவலர் அளித்த பதில் சரியில்லை என கருதினால் மேல் முறையீட்டு அலுவலரிடம் முறையீடு செய்து கொள்ளலாம். உரிமம் பெற்ற பிளம்பர் முறை 1990ல் ரத்து செய்யப்பட்டு விட்டது. ஆர்வலர் குறிப்பிடுவது இடைத்தரகராக இருக்கலாம் என கருதப்படுகிறது. சென்ற ஆண்டில் வீடு வீடாக சென்று தணிக்கை செய்ததில், 1,29,000 இணைப்புகளில் சுமார் 49,000 இணைப்புகள் வரி ஏதும் செலுத்தாமல் இணைப்பு பெற்றுள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனால் ஆர்வலர் குறிப்பிடும் இனங்கள் ஆவண பரிசீலனைக்கு பின்னரே உரிய பதில் அளிக்க இயலும் என தெரிவிக்கப்பட்டது.

- குறிப்பிட்ட புகார்கள் இம்மன்றத்தின் விவாதத்திற்கு எடுத்துக் கொள்வது சரியாக இருக்காது என்றும் புகார் மனுவினை நேரடியாக சம்மந்தப்பட்ட துறையினருக்கு அனுப்பி வைக்கவும் ஆணையர் கேட்டுக் கொண்டார்

## 12. பொது வநியோக திட்டம் -- உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

சென்னையில் கோட்டூர்புரம் பகுதியில் நியாயவிலை அங்காடிகளில் கடைக்கு தொடர்பில்லாத நபர்களின் ஆதிக்கம் காணப்படுகிறது.

- கோட்டூர்புரம் நியாயவிலை அங்காடியில் கடைக்கு தொடர்பில்லாத நபர்கள் அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. தற்போது கடைக்கு தொடர்பில்லாதவர்கள் யாரும் இல்லை என துணை ஆணையர் (நகரம்) தெற்கு தெரிவித்தார். அனைத்து நியாவிலைக் கடைகளிலும் தக்க கண்காணிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது போன்ற வெளிநபர்களை விரட்டுவதை விட அவர்கள் மீது கிரிமினல் வழக்கு தொடர வேண்டும் என ஆணையாளர் கேட்டுக் கொண்டார்.

சேப்பாக்கம் வளாகத்தில் இயங்கி வரும் அமுதம் நியாயவிலை கடையின் விற்பனையாளர் பொருள் பெற வரும் பொது மக்களிடம் பொறுப்பில்லாமல் நடந்து கொள்வது, முறையாக பொருட்கள் வழங்கவில்லை என புகார் தெரிவிக்கப்பட்டது.

- இது குறித்து துணை ஆணையர் (நகரம்) தெற்கு நடவடிக்கை எடுத்து விவரம் தெரிவிக்க ஆணையர் கேட்டுக் கொண்டார். நடவடிக்கைக்கு பின் மேற்படி அங்காடியின் விற்பனையாளரின் செயல்பாடுகள் எவ்வாறு உள்ளது என்பது குறித்து தகவல் தர தன்னார்வ நுகர்வோர் ஆர்வலர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

குடும்ப அட்டையில் வாக்காளர் அட்டை எண் குறிப்பிட்டால் போலி குடும்ப அட்டைகள் ஒழிக்கப்பட்டு விடும் என கருத்து தெரிவிக்கப்பட்டது.

- வாக்காளர் அடையாள அட்டை 5 முதல் 10 சதவிகித மக்களுக்கு இன்னும் வழங்கப்படாமல் உள்ளது. எனவே அதனை குடும்ப அட்டையில் பதிவு செய்ய அனைத்து குடும்ப அட்டைதாரர்களையும் வலியுறுத்துவது சரியாக இருக்காது. குடும்ப அட்டையை பொறுத்தமட்டில் வீடு வீடாக சென்று தணிக்கை செய்வதே சிறந்த பயனளிக்கும். இவ்வாறு செய்தததில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் 2 இலட்சம் மற்றும் திருச்சி மாவட்டத்தில் 1.20 இலட்சம் குடும்ப அட்டைகளுக்கு பொருள் வழங்கல் நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. மேலும் இப்பணி தற்போது 10 மாவட்டங்களில் நடைபெற்று வருகிறது. இருப்பினும் தன்னார்வ நுகர்வோர் அமைப்பு ஆர்வலர் தெரிவித்தபடி வாக்காளர் பட்டியலை நியாயவிலை அங்காடிக்கு அளித்து அதில் குடும்ப அட்டை எண்ணை பதிவு செய்திடலாம் எனும் கருத்தினை வரவேற்பதாக ஆணையர் தெரிவித்தார். இதனை நடைமுறைபடுத்த ஆவன செய்யப்படும் எனவும் தெரிவித்தார்.

ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தில் குடும்ப அட்டை வழங்கல் மிகவும் தாமதம் செய்யப்படுகிறது.அத்தாட்சி ஆவணங்கள் மீண்டும் மீண்டும் கேட்கப்படுகிறது. ஒப்புகை ரசீது தருவதில்லை என புகார் தெரிவிக்கப்பட்டது.

- ஆணையாளர் அலுவலகத்திலிருந்து அலுவலர்களை அனுப்பி தணிக்கை மேற்கொண்டு நிலைமையை சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என ஆணையாளர் தெரிவித்தார்.

## 12. <u>மருந்து கட்டுப்பாட்டுத் துறை</u>

- துறையை சார்ந்த அலுவலர்கள் இம்மன்றத்தில் கூற வேண்டிய கருத்துக்கள் ஏதுமிருந்தால் கூறலாம் என ஆணையர் கேட்டுக் கொண்டார். இதனையடுத்து மருந்து கட்டுப்பாட்டுத் துறை அலுவலர், அத்துறையின் செயல்பாடுகளை கீழ்க்கண்டவாறு விளக்கினார்.
    1. புகார் பிரிவு தொலைபேசி எண்கள் மற்றும் தொடர்பு அலுவலர் ஆகியோரின் விவரங்களை சுவரொட்டியில் அச்சடித்து ஒவ்வொரு மருந்து கடைகளிலும் காட்சிக்கு விரைவில் வைக்கப்பட உள்ளது.
    2. குடியிருப்போர் நல சங்கங்களை அழைத்து உயர் அலுவலர்களை கொண்டு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளது.

3. மருந்து தகவல் மையம் ஒன்று செயல்பட்டு வருவதாகவும் அதனை தொடர்பு கொள்வதற்கான தொலைபேசி எண்கள் சுவரொட்டியில் விளம்பரபடுத்தப்பட்டுள்ளதாகவும் அதனை தொடர்பு கொண்டு தடைசெய்யப்பட்ட மருந்துகள் எவையென பொதுமக்கள் தெரிந்து கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது.

➢ தடைசெய்யப்பட்ட மருந்துகள் விவரங்களை பத்திரிக்கை செய்திகளாக மாதம் ஒருமுறை வெளியிட்டால் பொதுமக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும் என ஆணையாளர் கருத்து தெரிவித்தார். மேலும் மருந்து கட்டுப்பாட்டுத் துறைக்கென இணையதளம் ஒன்று தொடங்கி, அதில் இந்த விவரங்களை சேர்த்திட ஆணையர் கேட்டுக் கொண்டார்.

13. **<u>இதர பொருட்கள்</u>**

➢ அடுத்த கூட்டத்திற்கான விவாத பொருளாக கீழ்க்கண்டவற்றை சேர்த்திட சில தன்னார்வ அமைப்புகள் கோரினர். அவைகளின் விவரம்:

1. நகராட்சி நிர்வாகம் தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளுடனான காலாண்டு கூட்டத்தினை கூட்டுவதில்லை. மேலும் மாவட்ட ஆட்சித் தலைவர் நடத்திடும் மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழுக் கூட்டத்திற்கும் வருகை தருவதில்லை.
2. புறநகர் பகுதிகளில் உள்ள டீகடைகளில் கலப்பட தேயிலை கொண்டு டீ தயாரிக்கப்படுகிறது. இதனை நகராட்சி நிர்வாகம் முறையாக தணிக்கை செய்வது கிடையாது. ஒரு சமயம் தணிக்கை செய்து 20 டீ கடைகாரர்கள் கலப்பட தேயிலை பயன்படுத்தியுள்ளதை கண்டுபிடித்தும் கூட அவர்களை எச்சரிக்கை செய்து விட்டுள்ளனர். இது பத்திரிக்கை செய்தியாகவும் வெளியிடப்பட்டுள்ளது. தவறு புரிபவர்களை தண்டனை அளிக்காது விடுத்துள்ளது வருத்தமளிக்கிறது.
3. பட்டாபிராம் / பாரதிநகர் பகுதிகளில் BSNL கைபேசிக்கான சிக்னல் சரிவர கிடைப்பதில்லை.
4. சென்ட்ரல் புறநகர் ரயில் நிலையத்தில் 2 கட்டண கழிப்பிடம் மட்டுமே உள்ளது. கூடுதல் கழிப்பிட வசதி செய்து தர கோரப்பட்டது.
5. பார்க் முதல் வேளச்சேரி வரையிலான ரயில் நிலையங்களில் அடிப்படை வசதிகள் ஏதுமில்லை. பயணச்சீட்டு கவுண்டர் தவிர வேறு எதுவும் இல்லை.
6. சென்ட்ரல் முதல் அரக்கோணம் வரையிலான ரயில் நிலையங்களில் கழிப்பிடம் மற்றும் குடிநீர் வசதிகள் செய்யப்பட்டுள்ளது. ஆனால் பொதுமக்களின் உபயோகத்திற்கு இன்னும் திறக்கப்படவில்லை.
7. ரயில்வே நிலையங்களிலுள்ள இரு சக்கர வாகனங்களை நிறுத்துமிடங்களில் அதற்கான கட்டணத் தொகை தன்னிச்சையாக வசூலிக்கப்பட்டு வருகிறது. இதனை முறைப்படுத்த வேண்டும். எவ்வளவு கட்டணம் செலுத்த வேண்டும் என்பது குறித்த விவரத்தினை அறிவிப்பு பலகையில் காட்சிபடுத்த ஆவன செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறது.
8. பெங்களூரு (ம) திருப்பதி ரயில்களில் முன்பதிவு பெட்டிகளில் பதிவு செய்யாத பயணிகளும் ஏறுகின்றனர். இதனை களைய நிர்வாகம் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை. மேலும் இந்த ரயில் பெட்டிகள் சரிவர பராமரிக்கப்படுவதில்லை.

## 14. பொது

- மேற்கண்ட தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள் தெரிவித்த கோரிக்கைகள் / புகார்கள் குறித்து உரிய துறைகளுக்கு கடிதம் எழுதி நடவடிக்கை தொடர ஆவன செய்யப்படும் என்றும் மேலும் இவ்வினங்கள் அடுத்த கூட்டத்திற்கு விவாத பொருட்களாக எடுத்துக் கொள்ளப்படும் எனவும் ஆணையாளர் தெரிவித்தார்.

- கூட்ட முடிவில் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மேற்கொண்டு வரும் நுகர்வோர் நலத் திட்டங்கள் பற்றி கீழ்க்கண்டவாறு ஆணையாளர் விவரித்தார்.

1. வட சென்னை மாவட்டத்தில் 7 இடங்களில் சுமார் 350 குடியிருப்போர் நல சங்க உறுப்பினர்களுக்கு நுகர்வோர் உரிமைகள் & கடமைகள் மற்றும் பாதுகாப்பான உணவு ஆகியவைகள் குறித்து முன்னோடி நுகர்வோர் அமைப்பின் ஒத்துழைப்புடன் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அனைத்து குடியிருப்போர் நல சங்கங்களை ஒருங்கிணைத்து 25/10/2008 அன்று ஜவகர்லார் நேரு உள் விளையாட்டு அரங்கில் விழிப்புணர்வு குறித்த கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

2. இதே போன்று சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள கல்லூரி / பள்ளிகளில் செயல்பட்டுவரும் குடிமக்கள் நுகர்வோர் மன்றங்களை ஒருங்கிணைத்து 15/11/2008 அன்று **நுகர்வோர் திருநாள்** நுங்கம்பாக்கம் MOP வைஷ்ணவா கல்லூரியில் நடத்தப்படவுள்ளதாகவும் ஆணையாளர் தெரிவித்தார். நுகர்வோர் உரிமைகள் மற்றும் தேவைக்கேற்ற நுகர்வு (Sustainable Consumption) ஆகிய தலைப்புகளில் மாணவர்களுக்கு போட்டிகள் நடத்தப்பட்டு, சிறந்த மாணவர்களுக்கு பரிசும், சிறந்த குடிமக்கள் நுகர்வோர் மன்றங்களுக்கு விருதும் வழங்கப்படவிருக்கின்றது. நுகர்வோர் தொடர்புடைய அரசு துறை மற்றும் நிறுவனங்கள் இந்த விழாவில் கலந்துக் கொண்டு தங்களது துறைகளின் நுகர்வோர் சேவை குறித்த விபரங்களை அரங்கு அமைத்து காட்சிப்படுத்தி நுகர்வோர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

கூட்டத்தின் நிறைவில் வருகை புரிந்த அரசுத் துறை / நிறுவனங்களின் அலுவலர்கள் மற்றும் தன்னார்வ நுகர்வோர் அமைப்பின் ஆர்வலர்களுக்கும் ஆணையாளர் மற்றும் தலைவர், சென்னை மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழு அவர்கள் நன்றி தெரிவிக்க கூட்டம் இனிதே நிறைவுற்றது.